மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தியாகராய நகரைப் பொறுத்தவரையில் நாலு ஸ்டால்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 600 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. மந்தைவெளியில் உள்ள நாலு கடைகளில் இரண்டு கடைகளை வாடகைக்கு எடுக்க யாரும் இன்னும் முன்வரவில்லை. மீதி இரண்டு கடைகளின் மூலம் 330 ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் * வெள்ளிக் குறியிடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

(2) தகவல் கோரல்.

(அ) பேரவைத் துணைத் தலைவர் மீது கொடுக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Chair when the no-confidence motion against you is scheduled to be taken up ? Will there be any special session or are we extending the session? That is a matter which you may please let us know.

DR. H. V. HANDE : We were told in the Business Advisory Committee that we are going to meet on 15th also and that would be the last day. Notice for no-confidence motion against the Deputy Speaker has been given. I understand that the 14 days' notice actually expires on 22nd or so. If that is the case, will the Hon. Deputy Speaker or Hon. Leader of the House give us an indication whether we are going to meet again on 22nd to dispose of this particular motion, or whether it is possible for the Hon. Deputy Speaker to waive some of the rules and have it earlier, if possible on 15th. The Hon. Chief Minister also gave us an indication sometime ago that he would place on the table of the House the reply with regard to the number of charges that were given to the Hon. President of India by some members. . . .

MR. DEPUTY SPEAKER : One issue at a time. With regard to the 'removal motion' I would like to state that the 14 days notice has not expired. Dr. Hande had raised the point whether we cannot waive it. But let me state that it is a consti-

tutional provision. We cannot waive it. After the expiry of 14 days I will consult the Hon. Leader of the House and announce the date. Members will be intimated regarding the next session.

(ஆ) அமைச்சரவை மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பட்டியல் பேரவை முன் வைக்கப்படுவது குறித்தும், அதற்கான பதிலை இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைப்பது குறித்தும்.

DR. H. V. HANDE: The Hon. Chief Minister has told us previously that he would try to place a copy of the charges against the Government on the table of the House and that he was in touch with the Prime Minister to get her permission for the same. He also told us that the DMK party leader in Parliament was also in touch with the Prime Minister. This has become a most important matter and the fate of Tamil Nadu hinges on this pivotal issue of list of charges. May I know what prevents this Government from placing the list of charges on the table of the House and also the replies of Government so that we could discuss the whole thing and if necessary certain other charges also that may be levelled against the Government ?

Also another point, Sir. With regard to the list of charges, the reply of the Chief Minister in response to the request of the Prime Minister should have been normally sent very early. But it is now more than three weeks since the charges have been sent to the Chief Minister by the Prime Minister, for his comments. Still, we understand from reliable authority that the Chief Minister has not sent his reply to the Centre. What is the reason for this abnormal delay, we would like to know all the mysteries ?

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த அமைச்சரவை மீது திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், திரு. கலியாணசுந்தரம் அவர்களும், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சிலரும் கையெழுத்திட்டு ஜனாதிபதியிடம் கொடுத்த குற்றச்சாட்டுகளின் பட்டியலை இந்த மன்றத்தில் வைப்பதற்கு ஏன் தயங்குகிறீர்கள் என்ற கேள்வியைக் கடந்த சில நாட்களாக நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், மற்றும் எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் இந்த மன்றத்தில் கேட்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் திரு. ஹாண்டே அவர்கள் அதே பிரச்னையை எழுப்பி அந்தப் பட்டியலை வைப்பதற்கு என்ன பயம், ஏன் தயக்கம் என்ற கேள்விக் கணைகளை விடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே, பிரதமருக்கு